09-02-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : தமிழ் மக்கள் முன்னால் உள்ள மூன்று தெரிவுகள்**

**தொடக்கவுரையாடல் : சி. கா. செந்திவேல்**

போருக்குப் பின் தமிழர்கள் அரசியல் ரீதியாக மிகவும் ஒடுக்கப்பட்ட நிலையில் வாழ்கிறார்கள். இராணுவமயமாக்கம், அரசியல் ஆதிக்கம் போன்றவற்றால் மிக மிக ஒடுக்கப்பட்ட நிலை தோன்றியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கூட்டம் வைப்பதற்கோ ஐந்துபேர் கூடிக் கதைப்பதற்கோ சுதந்திரம் இல்லாத நிலையே காணப்படுகிறது. இந்நிலையில் தமிழர்களின் முன்னால் இரண்டு தெரிவுகள் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளால் முன்வைக்கப்படுகின்றன.

ஒன்று, அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் மூலம் இணக்கப்பாடொன்றினை எட்டி அதன் மூலம் உரிமைகளை வென்றெடுக்கலாம் என்கிற நிலைப்பாடு. அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துதல், வெளி நாடுகளுடன் பேசுதல் என்றவாறானதாக இவ்வழிமுறை இருக்கிறது.

இதனைத் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் அதற்காதரவான சக்திகளும் முன்வைக்கின்றன. இது காலகாலமாக, பிரித்தானியருடன் ஆங்கிலத்தில் பேசி தீர்வினை எட்டுவது, சட்டவறிஞர்கள் பாராளுமன்றத்தில் பேசி தீர்வினை எட்டுவது, அரசியல் வாதிகள் பாராளுமன்றத்தில் முழங்கித் தீர்வினை எட்டுவது என்று தொடரும் ஓர் அரசியல் மரபாகும்.

இரண்டு, பிரிவினை வாதத்தை முன்வைத்து முன்னெடுக்கப்படும் அரசியற்பாதையாகும். இதனை ஒருகாலத்தில் புலிகளும் ஆயுத இயக்கங்களும் முன்வைத்தன. தற்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் குழுவினர், அவர்களுக்கு ஆதரவளிக்கும் புலம்பெயர் அமைப்புக்கள் போன்ற இப்பாதையினை முன்வைக்கின்றன.

இவ்விரு தெரிவுகளும் மக்களை அரசியல் சக்தியாகக் கருதி மக்களின் அரசியலை முன்னெடுப்பனவாக இருந்ததில்லை. நீங்கள் வாக்குப்போடுங்கள் அது போதுமானது நாங்கள் தமிழீழத்தை வென்று தருவோம் என்றவாறான அரசியலையும், நீங்கள் பணம் கொடுங்கள், நாங்கள் போராடி வென்றெடுப்போம் என்றவாறான அரசியலையுமே மக்கள் முன் வைத்தன. இதில் மக்கள் வலுவற்ற வெறும் வாக்குப்போடும் எந்திரமாகவும் பணம் கொடுக்கும் வங்கியாகவுமே இருக்கின்றனர்.

மூன்றாவது பாதை என்பது மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்து மக்களை ஒன்று திரட்டி மக்களை அடிப்படையாகக்கொண்ட மக்களெழுச்சிப்பாதையாகவே அமைய முடியும். இப்பாதையே இதுவரை பரீட்சிக்கப்படாததுமாகும்.

தமிழரசுக்கட்சி மக்களைத்திரட்டி போராடுவதாகக் காட்டிக்கொண்டபோதெல்லாம் அப்போராட்டத்துக்கான சரியான திசைவழியையோ திட்டமிடலையோ கொண்டிருக்கவில்லை.

சிங்களம் மட்டும் சட்டத்துக்கெதிரான போராட்டத்திலும் சரி, சிறீ ஒழிப்புப்போராட்டத்திலும் சரி இந்த நிலையே காணப்பட்டது. திடீரென போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டு நசுக்கப்படும்போது அதற்கு அடுத்தகட்டமாக என்ன செய்வது என்பது குறித்த சரியான திட்டமோ வழிகாட்டலோ இருக்கவில்லை.

ஆயுதப்போராட்டமோ, இராணுவ ரீதியான கண்ணோட்டத்தினை மட்டுமே கொண்டிருந்ததுடன், அரசியல் ரீதியான தூரநோக்கங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. தமிழர்களின் பகுதிகள் எங்கும் இராணுவத்தைக் குவிக்கப்பண்ணியதையும், இராணுவத்தை மேலும் மேலும் பலப்படுத்தி, மக்களது அழிவில் கொண்டுபோய் முடித்ததையும் அவை சாதித்தன.


போருக்குப் பின்னான நிலையிலும் கூட இலங்கையில் வாழும் ஏனைய மக்களுடைய பிரச்சினைகள் பற்றிப்பேசவோ, அவர்களுக்காக் குரல் கொடுக்கவோ தயாரான நிலையில் தமிழ்த்தேசியத்தலைமைகள் இல்லை.

மிகுதி அடுத்த பக்கம்

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**யாழ்ப்பாண நகரத் திட்டமிடல் எதிர்நோக்கும் சமூக அரசியல் சிக்கல்கள்**
சந்திரஹாசன் | 16-02-2012

**மரபணு மாற்றப்பட்ட உணவுப்பொருட்கள்**
சுகந்தன் | 16-02-2012



சார்ல்ஸ் டார்வின்

சார்லஸ் ராபர்ட் டார்வின் (Charles Robert Darwin) (பிப்ரவரி 12, 1809 - ஏப்ரல் 19, 1882) ஓர் ஆங்கிலேய இயற்கையியல் அறிஞர். இவர் முன்வைத்த உயிரினங்களின் படிவளர்ச்சிக் (Evolution) கொள்கை ஓர் அடிப்படையான புரட்சிகரமான அறிவியற் கொள்கை. இவர் தாம் கண்டுபிடித்த உண்மைகளையும், கொள்கைகளையும், 1859 ஆம் ஆண்டில் உயிரினங்களின் தோற்றம் (The Origin of Species) என்னும் தலைப்பில் ஒரு நூலாக வெளியிட்டார். இது மிகவும் புகழ் பெற்ற ஒரு புரட்சி ஏற்படுத்திய நூல். இவர் கடல் வழியே, எச்எம்எஸ் பீகிள் (HMS Beagle) என்னும் கப்பலில், உலகில் பல இடங்களுக்கும் சென்று, குறிப்பாக காலபாகசுத் தீவுகளுக்குச் சென்று நிகழ்த்திய உயிரினக் கண்டுபிடிப்புகள் வியப்பூட்டுவன. மனித இனம் குரங்கு இனத்தோடு தொடர்பு கொண்டது என்று இவர் அஞ்சாமல் கூறிய கருத்துக்கள், அன்று இவரைப் பலர் எள்ளி நகையாட வைத்தது. எனினும், இவருடைய கருத்துக்கள் இன்று அறிவியல் உலகில் பெரு மதிப்புடையவை.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## வலை

### முல்லைப்பெரியாறு : கேரள CPI(ML) கட்சியின் முன்மொழிவும் முனைப்பும்

குறுகிய இன உணர்வு/இனவாத வட்டத்தினுள் சுருங்கிக்கொள்ளாமல் எமக்கு வெளியே இருக்கும் இவ்வாறான சக்திகளுடன் கைகோர்த்துக்கொள்ளவேண்டிய தேவையினை தமிழ் மக்கள் உணரவேண்டும். உணர்ந்துகொண்டு இவ்வாறான மக்கள் சார்புச்சக்திகளைப் பலப்படுத்தவேண்டும். இதன் மூலம் மட்டுமே எமது அடுத்தடுத்த சந்ததிகளுக்கு நாம் பகைமைகள் நிறைந்த நச்சுச்சூழலை அல்லாது அமைதியான நல்ல வாழ்க்கை ஒன்றினைப் பெற்றுக்கொடுக்க முடியும்.

இலகு முகவரி : **valai.thulaa.net/67**

http://mauran.blogspot.com/2012/02/cpiml.html

### அனைத்து உழைக்கும் மக்களும் ஐக்கியப்பட்டு வீதியில் இறங்கிப் போராடுவதே ஒரே மார்க்கமாகும்

ஏலவே வடக்குக் கிழக்கு மக்களை யுத்தத்தால் கொன்றொழித்து, வந்த பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கம் இப்போது நாட்டின் ஏகப் பெரும்பான்மையான அனைத்துத் தொழிலாளர்கள் விவசாயிகள், மீனவர்கள் மற்றும் உழைக்கும் மக்களை விலை உயர்வுகளால் சாகடிக்க ஆரம்பித்துள்ளது. இவ் இடத்தில் இன, மொழி, மதப் பேதங்களுக்க அப்பால் அனைத்து உழைக்கும் மக்களும் ஐக்கியப்பட்டு வீதியில் இறங்கிப் போராடுவதே ஒரே

இலகு முகவரி : **valai.thulaa.net/68**

http://thulaa.net/home/archives/348

### Arbitrary Detention in Sri Lanka: Internment, Rehabilitation, and Surrenderees in the Prison

*In January 2012 I traveled to Sri Lanka with a group of fellow students from the University Virginia School of Law.[1] We wanted to learn about legal issues in other countries, and we arrived in Sri Lanka eager to hear views from government officials, NGO workers, and local citizens. I chose to focus on arbitrary detention in a number of settings including*

இலகு முகவரி : **valai.thulaa.net/69**

http://groundviews.org/2012/02/14/arbitrary-detention-in-sri-lanka-internment-rehabilitation-and-surrenderees-in-the-prison-system/

### Acta protests: Thousands take to streets across Europe

*Thousands of people have taken part in co-ordinated protests across Europe in opposition to a controversial anti-piracy agreement.*

இலகு முகவரி : **valai.thulaa.net/70**

http://www.bbc.co.uk/news/technology-16999497

## தமிழ் மக்கள் முன்னாலுள்ள மூன்று தெரிவுகள்

முன்பக்கத் தொடர்ச்சி..

கட்டுநாயகாவில், தமிழரையும் பாதிக்கும் தனியார் ஓய்வூதியத் திட்டத்தினை எதிர்த்து தொழிற்சங்கங்கள் தீவிரமாகப் போராடியபோது தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஓர் ஆதரவு அறிகையைத்தானும் வெளியிடவில்லை.

இன்று இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் திட்டமிட்டே இனப்பகை அரசியல் வளர்க்கப்படுகிறது. மக்களை இனங்களாகக்கூறுபோட்டு, ஒன்றுபட்டுப் போராட விடாமற் செய்வதுடன் இனப்பகைச்சூழலையும் கொதிப்பையும் உருவாக்குகின்றனர். இவ்வாறான இனப்பகைச்சூழலையே இலங்கையிலும் ஆளும் வர்க்கம் விரும்புகிறது. ஆளும் வர்க்கத்தினால் பாதிப்புக்குள்ளாகும் சாதாரண மக்கள் ஒன்றிணைந்துவிடக்கூடாது என்பதற்காக இந்நச்சுச்சூழல் வளர்க்கப்படுகிறது.

இனப்பகை களையப்பட்ட, ஒடுக்கப்படும், பாதிக்கப்படும் எல்லா மக்களுடனும் பொது உடன்பாட்டின் கீழ் இணைந்த மக்கள் நிலைப் போராட்டங்களுக்கான எத்தனங்களைச்செய்வதே தமிழர் முன்னுள்ள மூன்றாவது தெரிவாக அமைய முடியும்.

## யாழ்ப்பாண நகரத் திட்டமிடல் எதிர்நோக்கும் சமூக அரசியல் சிக்கல்கள்

**இந்த வாரம் உரையாடப்படவுள்ள தலைப்பு. (சந்திரஹாசன்)**

1. நகரத் திட்டமிடல் பற்றிய அறிமுகம்
2. போருக்குப் பின்னான மீள் கட்டமைப்பு
3. யாழ்ப்பாணப் பிராந்திய அடையாளமும் உலகமயமாக்கமும்.
4. போக்குவரத்து சார்ந்த பிரச்சினைகள்.
5. வலயங்களை அடையாளப்படுத்துதலும் நிறுவுதலும்.
6. குடித்தொகை நெரிசலையும் கட்டட நெரிசலையும் கட்டுப்படுத்தல்
7. அடிக்கட்டுமானங்கள்
8. பாரம்பரியச் சின்னங்கள், இடங்களைப் பாதுகாத்தலும் இயற்கை வளங்களை முகாமை செய்தலும்.
9. திட்டமிடலில் அரசியலினதும் மக்களினதும் பங்கு.
10. கேள்விகளும் கலந்துரையாடலும்




சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு.
இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
cc BY NC SA